அ.வ.எண்.80/2017 நாள்: 12.02.2026

பி.சா. 1 திருமதி. செங்கோல்மேரி

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வாதி ஜார்ஜ் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எங்களை காலி பன்ன சொன்னார் மறுத்துவிட்டதால் வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் வழக்கறிரால் தயாரிக்கப்பட்டுள்ளது நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் ஆமாம். உங்கள் கணவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளரா என்றால் ஆமாம். ராபின்சன் யார் என்றால் எனது கொழுந்தனார். இந்த வழக்கில் ராகுமான் இறந்தபிறகு அவருடைய வாரிசுகள் எத்தனை பேர்களை சேர்ந்துள்ளார்கள் என்றால் செங்கோல்மேரி, சாருகான், அபினேஷ்,அபிசேக் ஆகும்.

2. எனது சொத்து என்று சொல்வதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். தாவா சொத்தின் சர்வே எண். 155/11 ஆகும். அதனுடைய விஸ்தீரணம் என்ன என்றால் 9 செண்ட் ஆகும்.மேற்படி தாவா சொத்தை யாரிடமிருந்து வாங்கினேன் என்றால் செல்வம் அவர்களிடமிருந்து கிரையம் வாங்கிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். செல்வம் அவர்களிடமிருந்து எந்த ஆண்டு, எந்த தேதியில் தாவா சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் அதுபற்றிய விவரம் எனக்கு தெரியாது, அதுபற்றி எனது மாமியாருக்குதான் தெரியும். கோதண்டபாணி, கற்பகம் திருச்சவலந்தை கிராமத்தை சேர்ந்தவர்களா என்றால் ஆமாம் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள்தான்.

3. தாவா சொத்தை 28.11.2011 ம் ஆண்டு கோதண்டபாணி மற்றும் கற்பகம் ஆகியோர்களிடமிருந்து வாதி கிரையம் வாங்கிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய மற்றொரு கொழுந்தனார் பெயர் என்ன வென்றால் அலெக்சாண்டர். அவருக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் வருடம் ஞாபகம் இல்லை 7, 8 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. தாவா சொத்தில் அலெக்சாண்டர் திருமணத்தின் போது இடவசதி இல்லாத காரணத்தால் பந்தல் போட்டுள்ளோம் என்றால் இல்லை. தாவா சொத்தில் நான் தான் குடியிருந்தேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

S.d/ Sengolmary

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.02.12 16:05:18 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU